
த. மலர்ச்செல்வன்
தனித்துத் திரிதல்

# தனித்துத் திரிதல்

## த. மலர்ச்செல்வன்

*வெளியீடு:*
மறுகா
மட்டக்களப்பு

முதல் பதிப்பு: ஜூலை 2005

விலை:
இந்தியா: ரூ. 40.00
இலங்கை: ரூ. 150.00

வெளியீடு:
**மறுகா**
ஆரையம்பதி – 3
மட்டக்களப்பு, இலங்கை

நூல் உருவாக்கம்:
சுவடி, சென்னை 05
தொலைபேசி 044-28481662
மின்னஞ்சல்: chuvadi@gmail.com

அட்டை வடிவமைப்பு: சந்தோஷ்
நூல் வடிவமைப்பு: கீழ்வேளூர் பா. ராமநாதன்

அச்சாக்கம்:
மணி ஆஃப்செட், சென்னை 05

மு.கணபதிப்பிள்ளை
"மூனாக் கானா"
[illegible]
ஆரையம்பதி-03.

எங்களுக்காய் வாழ்வைச் சிதைத்து
கனவுகளைச் சுமந்து, நிஜமாக்குகின்ற...

**என் அம்மா பாக்கியலெட்சுமிக்கும்**
**அப்பா தங்கராசுவுக்கும்**

"தனித்துத் திரிந்த காலம்
மறுக்கப்பட்டுவருகின்ற பொழுதில்
"தனித்துத் திரிதல்" வெளிவருகிறது
மிகத் துக்கம்
... ... ...
... ... ...

த. மலர்ச்செல்வன்
*13.08.04*
ஆரையம்பதி – 3
மட்டக்களப்பு
இலங்கை



**தனித்து திரிகின்ற முதலாம் காலம்**

## இலைகளும் கிளைகளும் வாய்பொத்திய இரவில்

ஒரு சனமுமில்லை
தெருவில்
தூரத்தில் இரண்டு மூன்று கட்டாக்காலி
மாடுகளைத் தவிர.
எங்கும் நிலா ஒளியைப் பாய்ச்சுகிறது.
குண்டூசி விழுந்தாலும் எடுக்கலாம்,
நாய்கள் மட்டும் உறைந்துபோன மௌனத்தினை
துயில் எழுப்பின.

எப்படியிருந்த ஊர் தெரியுமா?
நேற்றிலிருந்து இதன்முகம் வேறு
காற்றும் இலைகளும் வாய் பொத்தி
ஒரு பூனையும் 'மியாவ்' என
அஞ்சுகிற இரவிது.

ஆறு மணிக்குப் பின்
வெளியில் வருவது பூச்சியாயினும்
அது சுடப்படும்.

எனக்கின்று நித்திரை வரவில்லை
புழுக்கமும் அவிச்சலும்
நேற்றைக்கு முன்பு என்றால்

கண்ணகி அம்மன்
வம்மிமர குருத்து மணலில்
அலுப்புப் போகப் படுத்துறங்கி
புழுக்கமும் அவிச்சலும் விலக வீடு செல்வேன்.

நானும் மதியும்
இருட்டுப்பட்ட பின்
காளிகோவில் றோட்டால்
'சைக்கிளை' உருட்டி உருட்டி
கதைத்துச் சிரித்து வருவது
இனி எப்ப?

*05.07.1994*

## அவளும், மிக நீண்ட பின்னிரவு இருட்டும்

ரெண்டு மூன்று நாளாய் இப்படித்தான்.
முன்னிருட்டு முற்றத்தில் நீவிக் கிடக்கு.
நிலவை இருட்டடைத்து
எங்குதான் போய் ஒளித்ததோ?

முற்றத்தில் கொட்டிக் கிடக்கும்
கடற்கரை மணலில் பாயை விரித்து
நீட்டி நிமிர்ந்து மல்லாந்து படுக்கிறேன்.
வெள்ளிப் பூக்கள்
குலைகட்டிப் பூத்துக் குலுங்குகின்றன.

பிஞ்சு மேகங்கள்தான் எத்தனை?
தலைதெறிக்க ஓடுகின்றன.
சூ... என்னழகு!
ஆகாயப் பரப்பினிடையே
எவ்வளவு அற்புதங்கள்.
நீண்டு விரிந்து கிடக்கும்
நீலவிரிக் கம்பளத்தில்

எத்தனை மர்மம்
எப்படித் துலங்கும்?

திடீரென எழுந்த வெண்கொண்டல்
கண்ணுக்குள் மண்ணையிறைத்துப் போயிற்று.
அவளிருந்தால் இன்னேரம்
ஊதி நீவிவிடுவாள்
அவள் நினைவுகள்
கரையாத பனிக்கட்டிகள்.

எப்படி மறப்பேன்?
என் செவிகள் இன்று அந்தக் கிளியில்லாத கூண்டு.

காதற் சுனையில் கண்டெடுத்த முத்தங்களையும்,
அவள் கண்கள் என் நெஞ்சில் எழுதிய கவிதைகளையும்
கரும்பலகையில் என்றும் அழியாத வெண்கட்டி
எழுத்துக்கள்
இன்று
அவளில்லாத் தனிமை
எனைத் துரத்தும் ஓர் அம்பு.

உடல் துவண்டு
ஊரத் திராணியற்ற பாம்பாய் பாயில் சுருண்டு
படுக்கிறேன்.
பக்கத்து வீட்டுக் கொய்யாவில்
சளாரென விழுந்து வெளவால்
சடசடக்கும் சத்தத்தில் முழிக்கிறேன்.
கனல் தெறிக்கிறது காச்சல்
வெளிக்கிளம்புது சுடு காற்று.
பிறகுமென்ன,
அவள் நினைவுதான்
ஒன்றும் எழுவதில்லை.

*05.01.1998*

## ❑ ஒரு பெட்டை நாய்கூட வாழ அஞ்சுகின்ற தேசத்தில்

காற்றில் இழுபட்டு வந்த செய்தி கேட்டு
ரெண்டு நாளாய் மனசு சரியில்லை.
குடலுக்குள் ஒரு பருக்கைகூட
இறங்காமல்
களம் வரை வேதனையால்
வீங்கிக் கிடக்கிறது.

என்ன உலகம் இது?
ஒரு பெட்டை நாய்கூட
தெருவில் தனித்துத் திரிய முடியாமல்
ஆயிரம் ஆண்குறிகள் முட்டுகின்ற
இவ்வுலகில்
நேற்றைக்கு முதல் நாள்
எருமைகளின் பொல்லுக்கு
ரெண்டு யோனிகள் கிழிபட்டபோது
பத்துப் பன்னிரண்டு வாய்கள்
காற்றில் கதைத்தன.
அறிக்கை விட்டன.
எல்லாம் காற்றோடு போயின.

என்ன நடந்தது?
"விசாரணை நடக்கும்.
கயவர்களுக்கு எதிராக
நடவடிக்கை எடுப்போம்"
அமைச்சர் கதைவிட்டார்.

தலைவியும் வாய் திறந்தாள்.
"தவறு இழைத்தவர்களைத் தண்டிப்போம்"
"யாரும் தப்ப முடியாது"

எனக்கிதில் நம்பிக்கையில்லை.
மூடிமறைத்த எத்தனையோ நங்கைகள்போல்
இவர்களும் அப்படியே அப்படியே போவார்கள்.
கடவுளே! ஏன் படைத்தாய்?
ஆண்குறியை
யோனியை
முலையை
ஏன் படைத்தாய்?

நஞ்சுக்கனி கொடுத்து
ஏன், வெட்கம் துறந்தாய்?
ஆண்குறியெழ,
ஏன், சுதி கொடுத்தாய்?

## வெக்கை எழுகிற சாமியறை

வியர்த்துக்கொட்டி
வெக்கை எழுகின்ற சாமியறையில்
'ரப்பர் பாயை' இழுத்தெறிந்து
வெறும் தரையில் சாய்கிறேன்.
உடல் முழுவதும் அள்ளி வீசியெறிந்த
உம்பாரவேர்க்குரு குறுமண்கள்
சர்வாங்கமெங்கும் சுள்ளெனக் குத்தி
அவஸ்தைப்படுத்த
சடாரென எழுந்து, முன்வாசல்கட்டில் அமர்கிறேன்.

கடும் வெக்கை
சாறனை உரிந்து
நிர்வாணமாகப்படுத்தாத்தான்
ஒரு சொட்டுக் கண் மூடுமோவென்ன?

என்ன காலமிப்ப?
கண்ணகியம்மன் குளிர்த்தி முடிந்து
அடுத்தநாள் குளிர்ச்சி பொங்கும் இவ்வூரில்

உடலில் ஒரு துண்டு
உடுபுடவையில்லாமல்
உறங்க நினைக்கும் காலமிப்ப?

எல்லாம் மாறிப்போயிற்று.
முன் சிரித்துப் பழகி
பசும்புல்லாய்க் காட்சி தந்து
தன்பக்கம் சாயும்
கோழைகளைத் தூக்கிப்பிடித்து
மற்றோரை
பின்முதுகில் குத்தும் மனிதர்களாய்
காலமும் மாறிப்போயிற்றோ?
எல்லாம் காலம்.

*20.05.2001*

## ஒளிரும் வாழ்வுக்காய் உருகும் பாடல்

இன்னும் எத்தனை நாட்களுக்குத் துயருறுவேன்.
கருணையில்லாக் கடவுளே!
என்னைச் சிறையில் அடைத்த போது
நீர் தூணில் இருப்பதாகச் சொன்னார்கள்.
துரும்பில் இருப்பதாகச் சொன்னார்கள்.

உனைக் கூப்பிட்டேன்.
கதறியழுதேன்.

ஒளிரும் உன் சிரசிலிருக்கும்
பிறையைக்கூடப் பார்க்க முடியாமல்
பசியாலும் தாகத்தாலும்
நான் வஞ்சிக்கப்பட்ட போது
நீ, பன்றியாய் வந்து
பாலூட்டிய கதை
என்னுள் எழுந்தது.

மீண்டும் உனை நோக்கிப் பிரார்த்தித்தேன்.
ஒருகவளச் சோறாவது தருவாயென,
தட்டை நீட்டித் தவமிருந்தேன்.
படுபாவிகள் சிறுநீர் கழித்துப் போனார்கள்.
நீ, ஒன்றும் செய்யவில்லை.


அசுரர்களையும்
அரக்கர்களையும்
அழித்ததாய் ...
ஆலகால விடத்தை உண்டதாய் ...,
சொல்கிறார்கள்.
நம்ப முடியவில்லை ...

சுடலைச் சாம்பலைப் பூசி
காலத்தை ஓட்டுகிறாய்.
மசூதிகளிலும் தேவாலயங்களிலும்
வேறுபெயர் சொல்லி,
நீதான் என்கிறார்கள்.

போதும்,

நீ எழு,
கருணையில்லாக் கடவுளே!

*01.01.2000*




தனித்துத் திரிகின்ற இரண்டாம் காலம்

## கழுத்தை நீட்டி நிமிரும் ஒரு மரணத்திற்காய்

எல்லாம் போயிற்று
மரணம் என் முன்
கழுத்தை நீட்டி நிமிர்கிறது.
பெரும் பூதமாய்
விழித்துப் பார்த்து
வாய் திறக்கிறது.

என்ன இது?
ஒரு சிறு உடுதுணியில்லாமல்
இலத்திரன் துளியளவும்
நம்பிக்கையற்று
அமுங்கிப்போய்க்கிடக்கும் வாழ்வு
உடைந்து தெறிக்கும்
பலூனாய்த் திமிர்கிறது.

இன்னும் கேட்கிறது.
நாள் முழுவதும்
விம்மித் தெறிக்கும்
பேரோசையாய் இன்னும் கேட்கிறது.
எல்லாம் அதிர்கின்றன.
விண்மண்ணென
எல்லாம் அதிர்ந்து
நீராய்ப் போகின்றன.
இது புதிதல்ல

இன்று மட்டும்
நீண்ட கணமாய்
குணம் கொண்டு
சற்றும் திருந்தாது
சுழிக்காற்றாய் நொண்டித் திரிவதுதான்
என்னென்று தெரியல்ல?

ஏன் இந்தக் கோணங்கி?
கழண்ட நட்டாய்
கழுத்தை நீட்டி
என்முன்வந்து நிமிர்கிறது.

வருகிறது! வருகிறது!
மிக வேகமாய்
நிட்சயமான மரணம்
என்முன் கழுத்தை நீட்டி வருகிறது.

02.02.2001

## அழாத பின்னேரம்

அழப்போவதில்லை.
நேற்றுச் செத்த நண்பனுக்காய்
இன்று நான் அழப்போவதில்லை.

தொண்டையடைக்க
துயர்கொண்டெழ
ஆடுமாடாய், அடைபடப் போவதுமில்லை.

இனி என் தருணம் வந்துவிட்டது.
எத்தனை நாளைக்கு ஆமை வாழ்வு?
சொல்லுங்கள்.

போகிறேன்
என் ஊர்
என் உறவு
என் பாசம்
நான் வளர்த்த மரங்கள்
யாவற்றையும் விட்டு
...மீட்புக்காய்
நான் போகிறேன்.
அம்மா!
என்னைத் தேடி, தெருத்தெருவாய்
அலைய வேண்டாம்.

அப்பா!
உணர்ச்சி பொங்கி
உளற வேண்டாம்.

தம்பி, தங்கைகளே!
பாசம் கொண்டு,
கதறியழ வேண்டாம்.
அண்ணன் வருவான்
ஒருகால்
தங்கச்சிக்குத் தாவணியும் பாவாடையும்
தம்பிக்கு
பச்சைப் புள்ளி போட்ட ரீசேட்டும்
கறுத்தக் காற்சட்டையும் வாங்கி
அண்ணன் ஒருகால் வருவான்.

நான் போகிறேன்.
யாரும் தேட வேண்டாம்.
மஞ்சந்தொடுவாய் 'சோதனைச் சாவடியில்'
நேற்றுச் செத்துப்போன நண்பனாய்
நானும் மாள விரும்பவில்லை.

என் தேசம்
என் இனம் நோக்கிப் போகிறேன்
யாரும் தேட வேண்டாம்.

*01.01.2001*

## என்னுள் உதைத்தெழும் ஒரு சிறுபயல்

நம்ப முடியவில்லை
என் நினைவதிர்வுகளில் கணக்குத் தப்பிய அவனை
ஒரு கணம்கூட இப்படி
நினைத்துப் பார்க்க முடியவில்லை
அப்படியவன்.

சிறு பறவையாய் வட்டமிடும் பீச்சான் குருவியைப் போல்
அவனை நான் பார்த்தேன்
மிகச் சந்தோசம் அன்று.
திண்டவுடன் புகை ஊதும் அவனுடன்
'ஹோட்டலு'க்குப் பின் அறையில் அளவளாவிய
அந்தக் கணத்தில் ஒரு 'தம்' உள்ளிழுத்து
"நீ பத்திரயில்லையா"
'பத்தணும்'.

ஒரு செக்கன்கூட நம்பிக்கையற்ற
இந்தப் பொன்னுடலைப் பொத்திப் பொத்திக் காத்து
என்ன மசிரைக் கண்டாய்?
புகையை மேலூதி வளையம் செய்த அவன்
நெஞ்சுக்கு நேரே இருவிரலை அழுத்தினான்.

எனினும்
காற்றில் அவனைப் பற்றி வந்த
ஆயிரம் கதைகளும் ஒரு லட்சம் குறிப்புகளும்
எனக்குப் புரிந்துபோயிற்று.

நாலு கவிதைகள்
எழுதிய பெரும் கவிஞர்கள்
நேற்றோடு என்னிலில்லை.
அவர்கள் இனிக் கனவிலும் வரார்.

சிறுபயல் உதைத்தெழுகிறான்
ஒரு வண்ணாத்துப் பூச்சியாய்
பூஞ்சிறகை விரித்து.
ஆகாய முகட்டை நோக்கி அவன் போகிறான்.

*10.12.2000*

## காடேறிப் பிசாசுகளும் என்னில் எழுந்த உயிர்க் கவிதையொன்றும்

திடீரென அலறியடித்து எழுகிறேன்.
நேற்றைதுதான்
என் கண்முன்

முப்பது முப்பத்தைந்து வயது
பாலொழுகும் நிலாவின் நிறம்
ஒல்லியும் பருமனுமில்லா
உடல்வாகு
இளம் பெண்மணிதான்.

சிதைத்துக் கிழித்து
ஓநாய்க் கூட்டமாய் உருவழித்துப்
போட்ட உடல்
பார்க்க முடியவில்லை.
சிரம் தாழ்த்துகிறேன்.

என்
மண்டைக்குள் தீக்குழம்புருகி
கண்களில் அனல் தெறிக்கிறது.

என் உடல் முழுக்க
நெட்டி நிற்கிறது மயிர்க்கால்கள்.

என்ன செய்வேன்?

தோலுரிந்து எழுகின்ற வீரம்
எதிரிடைத் திசைகளில் உடைந்துபோக
வெட்கிச் சபிக்கின்றேன்.

அவளுக்காக, இன்று
என்னால் ஒரு கவிதான் எழுத முடியும்.
எழுக! என்னில்,
உயிர்க் கவிதையொன்று

*08.11.1998*

## சொட்டு உசிரில் துடிக்கின்ற கிராமம்

ஏதும் என்னிடத்திலில்லை
கம்மென்றுபோன
என் கிராமத்தைத் தவிர ...

உங்கள் நகரில்
நூற்றி மூன்று உயிர்கள்
காவுகொள்ளப்பட்ட
மறுநாள்,
அரைத் தூக்கத்திலரட்டிக்
குதறிய ஈனத்தை
எப்படிச் சொல்வேன்?
என் நண்பர்களே!

ஏதும் வார்த்தைகள் இனியில்லை.

ஏன் செய்தீர்கள்?
கடல்கடந்து வந்து
ஏதுமறியாக் கிராமத்தை
ஏன் நாசம் செய்தீர்கள்?

நூற்றிமூன்று உயிர்களுக்காய்
நீங்களும் பழிதீர்த்தீர்கள்.
நீங்கள் மட்டும்
எப்படி யோக்கியவானாய்ப் போவீர்கள்?

இருந்தும் மீசான் கட்டையிலெழுகின்ற
துயர் கீதத்தை
இக்கணம்கூட மதிக்கின்றேன்.
ஆனால், என் கிராமத்திற்கப்பால்
ஆறு கடந்து
உம் வீரத்தைக் காட்டியிருந்தால்
பலநூறு கவியெழுதி
பறைசாற்றிப் பாடியிருப்பேன் . . .

*10.05.1997*

## மழைக்கால இருள்வெளியில் ஒப்பாரிப் பாடல்

நீ போனாய்
மழைக்கால இருள்வெளியில்
எம்மனதிலெல்லாம்
கறுத்த சாயம் வீசி
தன்னந்தனி வெளியாய்
நீ மறைந்து போனாய்.

ஊரெல்லாம் கேட்பாரில்லாமல்
மூடிமறைத்த உன் ஞாபகம்
இரண்டு கிழமையின் பின்
குசுகுசுத்தது ஊரெல்லாம்
வாய் பேச...

கண்ணைக் கட்டி
எனை அழைத்து
சொப்பின் பேக்பிடித்து
கதறக் கதற
ஆணுறுப்பில் பெற்றோல் ஊத்தி
லாச்சிக்குள் வைத்து அமுக்கி
இரத்தம் பீறிட...
அலறி ஒப்பாரியிட்டு

லட்ச நாம அர்ச்சனைக்கும்
காது கேளாக் கடவுளின்
கருணையின்றி

இரண்டு வருட
இருட்சிறையிலிருந்து
நான் விடுதலையானது
உனக்குத் தெரியாது.

நீ, மக்களுக்காய்
சுடுகலன் ஏந்தியவன்.
ஒரு சொட்டுக் குடும்பப் பாசமின்றி
அம்மா, அப்பா, சகோதரர்களை உதறித் தள்ளி
இன விடுதலைக்காய்...
சுடுகலனைத் தோளில் சுமக்க
நீ எம் கண்ணில் மண்ணைத் தூவி
மறைந்து போனவன்.
இப்ப ஏன் வந்தாய்?

இருள் வெளியில்
இரண்டு வருடம் கழிந்த உன் ஞாபகம்
எம் நெஞ்சத்தில் "கிச்" என்ற
பாச அதிர்வுகள் இல்லத்துப் போனபோது
மீண்டும் ஊரில் வாய் முளைத்து
உன் நாமம் ஊரெல்லாம் பரவ...

கைகள் நடுங்கி
கால்கள் உதற
ஏது செய்வதென
மலக்க மலக்கப் பார்க்கிறேன்.

ஏன் வந்தாய்?
சுடுகலனைத் தோளில் சுமந்து
வீரராய்ப் போன நீ.

*05.05.2000*

## ஊழிக்காலத்தில் புகழ்பாடும் ஒரு கவிதை

உன் பச்சை முகம்
வெளித்தெரிந்தும்
உனைத் தூக்கிப் பிடித்து, ஏன்?
பல்லக்கில் சுமந்து செல்கிறார்கள்.

நீ படைக்கும் உலகம்
பிரம்மாண்டமானது.
இப்படித்தான் சில
எருமைகள் கதைக்கின்றன.
நீதான் எல்லாம்
நீதான் நீதான்...

சோம்பேறிகள்
உமைத் தலையில் தூக்கிவைத்து
ஆடுகின்றன.

நீ எத்தனை நாளைக்கு
இந்த உலகத்தை
இப்படிப் படைப்பாய்?

ஒரு காலையும்
ஒரு கையையும்
ஒரு கண்ணையும்
ஒரு காதையும்
எத்தனை நாளைக்கு நோண்டுவாய்?

ஏவாளையும் இப்படித்தான்
உன் பாட்டன் படைத்ததாய்
நேற்றிலிருந்து கதைவிடுகிறாய்.

விலா எலும்பில்தான்
எங்கள் வெற்றியுள்ளது
நாங்கள் எதையும் செய்வோம்.
நாங்கள் எதையும் வெல்வோம்!

ஒன்றும் புரியவில்லை.
உனது மந்திரம்
யாருக்குத்தான் புரிந்திருக்கிறது?

ஆனால், உன் வியாபாரம்
உன் சிருஷ்டிப்பு
ஒரு நாள் தெரியும்
அப்போது நான் ஒரு
கவிதை எழுதுவேன்
அது உன் புகழைப் பாடும்.

30.07.2002

## நீள் உயிர்வெளி

நீள் உயிர்வெளிப் பயணத்தின்
ஒருசற்று நேர ஓய்விற்காக,
மீண்டும் நான் வந்திருக்கிறேன்.

நீதான் பிதற்றுகிறாய்
மூன்று காலில் வந்திருப்பதாய்
துயர் கொள்கிறாய்
நான் சொட்டும்
அதுபற்றிக் கலங்காது
என் வேட்கைக்காகக்
காத்துக்கிடக்கிறேன்.

துயர் கொள்ளாதே!
ஒளிரும் என் காலம் வரும்
எதிரியைத் துரத்தியடிக்கும்
காலம் மீண்டும் வரும்.
அப்போதும் நான் வருவேன்.

அந்நேரம்,
மழைக்கால இருள்வெளியில்
நான் மறைந்து போனதை...
நீ பெருமை கொள்வாய்.

*01.08.2002*

## சாம்பலாய்ப் போகும் நான்

அவர்கள் முட்கம்பி வேலிகளைத் தாண்டி –
வருவதாகக் கதைகள் காற்றில் வந்தன.
நூறு புரவிகள் புழுதி கிளப்பி
கனைக்கின்ற ஓசை ...
வெகு தொலைவில் நிற்கும்
எமை உசுப்பியெழுப்ப,
இன்னும் இன்னும்
புதுப்புதுக்கதைகள் வந்தன.

அரசனும் வருகிறானாம்.
அடிபட்டு அணிதிரளும்
வீதியின் இருமருங்கிலும்
கண்ணுக்கு எட்டாத் தூரம்வரை
கறுத்த பொட்டுகள் தெரிய
அரசனுக்காய் தவம் கிடக்கும்
என் ஊர்மக்களைப் பார்க்க –
பாவமாகயிருந்தது.

மெல்ல இருட்டிப் போகின்ற
மாலை நேரம்
கண்சிமிட்டி முளைக்கின்ற
அடிவானத்து வெள்ளி கிளம்பியும்

அரசனும் படைகளும் வரவில்லை.

பூக்கள் வாடின ...
விளக்குகள் அணைந்தன
... கூட்டம்
நான் புகைந்து புகைந்து
சாம்பலாய்ப் போகிறேன்.

அரசன் இன்னும் வரவில்லை.

*25.01.2003*

## யுத்தம் தொடங்கா, முன் காலத்தில்

காலம், யுத்தத்தையே திணிக்க முயல்கிறது.
எந்தச் சலனமற்றும்
புயல்காற்றைக்கூட
அமைதியாகப் பார்த்து நிற்கும் போது.
வேண்டுமென்றே சீண்டிச் சீண்டி
எமை மீண்டும்
களத்திற்கு அனுப்ப முயல்கிறது அது.

எத்தனை நாள்களுக்குத்தான்
இப்படி நிற்பேன்?
எனது உறையுள்
உறங்கும் வாள்
கடைசிக் காலத்தின் இறுதிவரை
மூச்சை உள்ளிழுத்து
எம்மீது பழியையள்ளிவைத்து
உலகம் பூராக் கொக்கரிக்க

எனது தலை தொங்கிக்கொண்டு
எனது கைகள் கட்டப்பட்டு
எனது வாள் உறங்கிக்கொண்டேயிருக்க
நிராயுத பாணியாய்
காலத்தின் முன் நிற்பேன்.

*03.11.2002*

## மல்லுக்கிழுக்கின்ற சுணங்கன்

மீண்டும் யுத்தம் தொடங்கியதாகச்
சொறி நாயொன்று கத்தியது.

எத்தனையோ யுகப்
பிரளயத்தில் முகம்கொடுத்து
திமிரேறிப்போன உடலுக்கு
இந்தச் சொறி நாயின் கூக்குரல் பெரிதல்ல.

கிழட்டுச் சிங்கத்தின்
கவட்டுக்குள் மறைந்துகொண்டு
உலகத்தையே நான்தான் ஆளுவதாக
வீணிவழியக் குரைக்கும்
சொறி நாய்க்கு
இந்த ஊரில் வாழ்வதற்கென்ன
யோக்கியமிருக்கு.

கசப்பானதும்
அருவருப்பானதுமான
காலங்களை நான் நினைவுகூர
விரும்பவில்லை.
அது
ஊழிக்காலத்தின்
பின் நிலவுக் காலங்களின்
சலசலப்புக்கள்.

இன்று நீ
இவையெல்லாம் மறந்தும்
கிழட்டுச் சிங்கத்தின் கவட்டுக்குள் மறைந்துகொண்டு
நான்தான் அரசி
என் கட்டளைக்கெல்லாம்
யாவரும் தலைவணங்க வேண்டுமென்று
நீ சொல்வதுதான் புரியவில்லை.

மீண்டும் நிலாக்காலம் தொடங்கியது
திமிர்கொண்டு உடல்
குறுகுறுக்க . . .
குளிரேறிப்போன தெருக்களில்
நடக்கிறேன்.

புணர முடியாது.
கிழட்டுச் சிங்கம் நாக்கைத்
தொங்கப்போட்டு, ஓட . . .
சொறி நாய்
கதறக் கதறக் கடித்துத் துரத்துகிறது.

மீண்டும் யுத்தம் நடக்கும்.
அதில் நான் வெல்வேன்.

*10.03.2003*

## ... அலைகள் 1, 2, 3 ↔ 4 ...

துட்டகைமுனு எழுந்தான்
எல்லாளன் மைந்தர்களின்
ரத்தத்தைப் புசித்து
நீண்ட நாளாய்ப் போயிற்று
பல்லைக் கட்டியிறுக்கிக்கடித்து
கையில் வாளை எடுத்தான்.

வெஞ்சமரில்
முட்டிமோதிய கேடய ஓசை
காதோரமாய் ரீங்காரம் மிட்டது.
பயந்து நடுங்கினான்.

புரவியில் தாவியேறியவன்.
இது எந்தன் நாடு!
புத்தனின் புனிதநாடு!
இங்கு யாருக்குமிடமில்லை.

நட்டுவக்காலிகளுக்கு
நம் தேசத்தில் இடமா?
இல்லை... இல்லை...

மஞ்சள் துண்டுக்கே
கழுத்தை வெட்டிய சந்ததி
எம் காலை வாரமுயல்வது
எவ்வளவு தகும்?

இது எங்களுக்குமான பூமி.
நாகரும் இயக்கரும்
நலமுடன் வாழ்ந்தநாடு.

எல்லாளன் உயிர்த்தான்.

யுத்த விதியே தெரியாத
கெமுனுக்களுடன்
இன்னுமென்ன பேச்சு.
கையில் வாளையெடுத்தான்
புரவி காற்றைக் கிழித்துப் பறந்தது.

*23.01.2003*

## சாக்கடவுளில்லாத் தெருவில்

மிச்சநாளைக்குப் பிறகு
சாக்கடவுளில்லா
எமது தெருக்களில் நடக்கிறேன்.

எனது கழுத்தை இறுக்கிப் பிடித்து
இருகன்னத்திலும் மொத்திய
தலைக்கறுப்புகள் எதுவும்
என் விழிகளில் படவில்லை.

—2—

புதுவீரர்கள் பயணிக்கும்
நாற்சந்தியில்
குதூகலித்து நிற்கும் என்னூர் மாந்தர்கள்
கதிராளிக்கப்பால்
பெரும் கேள்விகளுடன்
காலத்தையோட்டுகிறார்கள்.

... வருமா?
இல்லை வராது.
நடக்கிறேன்.

*15.04.2003*

## ☐ சூனியக்காரனின் பிறப்பின் ரகசியம் பற்றி நாலாவது சாமத்தில் எழுந்த கேள்வி

நீண்ட வரலாற்றின் பின்
உன் அவதாரம் பற்றிக்
கேள்விகள் எழும்பியிருக்கின்றன இன்று.

கலியும் பிறக்க
சில வருடங்களுக்கு முன்
உன் பொய் முகம்
எழத்தொடங்கியிருந்தபோது
நான் நாலா பக்கமும் சொல்லியும்
உன் நாமத்தை நம்பினார்கள்.
இறுதிவரை நீ அழிக்க முடியாது
நெஞ்சம் முழுவதும் பரவி
அழுக்குப் பாசியாய்ப் படிந்திருந்தாய்.

ஒவ்வொரு கணமும்
புதுக்கவிதையுருவில்
நீ ஜனனிப்பாய்.
ஆயிரம் தலை சர்ப்பராஜனின் மீது,
பள்ளிகொண்டு
காட்சி கொடுப்பதாய்க் கதை.

பெண் என்று இரங்கி
நீள் சீலை கொடுத்ததாய்க் கதை.
காதலியாய் ஏற்று
கலவிகொண்டதாய்க் கதை.

வைகுண்டத்தில் ஆழ்துயில் நாழிகை
எமக்கிங்கு ஒரு யுகம்.
உனக்கொரு பொழுது.
இதுவும் கதை.
இப்படி ஆயிரம் கதை.

இருந்தும்,
ஒவ்வொரு யுகத்திலும்
நீயென்ன செய்தாய்?
தர்மத்தைக் காத்ததாய்
குருஷேத்திரத்தில் ஆயிரம் அக்குரோணி
உயிர்களைக் குடித்து
அதர்மத்தையே விதைத்தாய்
சுதர்ஷனத்தைக் கையில்வைத்து
யுகம் தோறும்
கணக்கிலடங்கா அப்பிராணிகளின்
தலைகளைக் கொய்தாய்
எப்படி நீ அவதாரமாவாய்?

... ... ...

எப்படியும் இன்று.
சுவாரசியமான கதைகளெதுவும்
பாட்டியிடமில்லை.
என்னிடமும் உன் விஸ்வரூபம் பற்றி
எந்தக் கற்பனையுமில்லை.
என் பிள்ளைகளிடமும்
உன்னைப் பற்றி இனி
ஏதும் பொய்மையிராது.

05.03.2003

## போர் வீரன் நாறிய நாள்

கலி பிறந்து
முப்பத்தினாலு சொச்சம் வயது கடந்த போர்வீரன்
நரைத்தலைக் கிழவியின் மந்திரக் கோலுக்கு
நாசமாவானானென்ன?

ரெண்டாம் சாமத்தில்
சுகித்தலுக்காய் மாயாவித்தைக்காரி
அழைத்தபோது
அச்சம் கொண்டு ஆளை விடுயென்று அகன்றான்

சில மாதங்கள்வரை
பூத கணம் காரி
சூள்கொண்டு பேயாய்த் துரத்தி
யோனியை உடல் முழுதுமொட்டி
தாகம் தீர்க்க அலைந்தாள்

போர்வீரன் அசையவில்லை
மாயாஜாலத்தை உருவாக்கி
போர்வீரனின் நாமத்தை
காற்று மண்டலம் முழுதும்
நாசம் செய்தாள்.

வன்மம்கொண்டு
நாலா திசையும் எறிந்தாள்
அவன் அசையவில்லை.

முன்னரும் அவள்
வெறிகொண்டு
நான்கைந்து குட்டிகளைச் சிதைத்ததாய்
மெய்மை வெளிவருகின்றன இப்போ.

அதே கணம்,
அவள் முன் கதைப்பதற்கு
மாந்தரெல்லாம் பயம்கொண்டு நடுங்கி
நா அடக்கி
பெட்டிப்பாம்பாய்ச் சுருண்டனர்.

இப்போ,
மூன்று பேய்கள் மாத்திரம்
போர்வீரன்
“மிஸ்யூஸ்” பண்ண நினைத்ததாய்
நரைத்தலைக் கிழவியுடன்
நாறிய பொழுதைக்
கிளறுகின்றனர்.

பாவம் அவன்

*21.07.03*

## ❑ யோனியும் குறியும் இல்லத்துப்போய்

என் பெயரில்
நாலுகோடு கீறி
ஓவியமானது முகம்.

என் முகம் பற்றி
யாருக்கும் தெரியாது.
என் முகத்தில்
காற்று முளைக்கின்றது.

. . . . . . . . .

என் முகத்தில்
தீப்பிளம்புகள்
வாய் பிளக்கின்றன.

கடுகடுக்கும் தேகத்தின்
உள்ளொளியில்
ஆயுதங்கள் துளிர்விடுகின்றன.

போதும்

கடும் தவத்திற்காய்
பயணிக்கின்றேன்.

மீள்வேன்
புதிய கிரகமும்
புதிய மனிதருமாய்.

அப்போ உங்களுக்கு
யோனியும்
குறியுமிராது.

*30.06.2004*

## கிழிகின்ற நிழல் அல்லது புதியகதை

தெருவில்
தொங்கவிட்டிருக்கிறாய்
உள்ளாடைகளை.

வீட்டின் மூலைகளை
நிழல்களில் ஒட்டி
கட்டட்ட விரிசல்களை
எறிந்திருக்கிறாய்.

நீ மட்டும்
"நடந்தால் புல்லும் சாகாது"
"... ... ..."
எப்படி?

ஆளற்ற வீட்டில்
தினம் தினம்
உன் அத்துமீறல்களுக்கு
நான் மட்டும்
வாய் பொத்தி
கீழ்ப்படிய வேண்டும்.
ரத்தம் சொட்டும்
நாள்களிலும்கூட
உன்னுடன் புணர வர வேண்டும்.

நீ அழைக்கும்
ஒவ்வொரு கணத்திலும்
நான் மல்லாக்காய்
சவம்போல் கிடக்க வேண்டும்.

நீ தாகம் தீர்ப்பாய்
நான் . . . ?

ஊன்றிக்கொள்ள
எனக்கு ஒரு தடிபோதும்
உன்னுடன் இரவையிழந்து
வாழ்வை . . .

நான் இனி,
ஒரு வண்ணத்திப் பூச்சியாய் வாழ்வேன்.

*05.07.2004*



**தனித்துத் திரிகின்ற மூன்றாம் காலம்**

## தலைமீது விதியெழ எழுகிற ஓவியம்

ஒளிரும் ஓவியங்களை
நான் மீண்டும் மீண்டும்
பார்க்க மாட்டேன்.
அது என் ஓவியம்.

அருவ உருக்களுக்குள்
அடைய முடியாத
வெப்பத் தீயை என்னுள்
கீறிவிட்டுப் போன என் ஓவியம்.

தொலைவிலிருந்து ஒளிரும்
மஞ்சள் சிவப்புப் புள்ளியாய்
தீண்ட முடியாத என் உறவினை
வரைந்துவிட்டுப் போன ஓவியம்.

நேற்றிலிருந்து திடீரென வெளிப்பட்டு நிற்கிறது.
ஒப்பாரிப் பாடல்களை
கிளறிவிட்டு,
என் வான் வெளியில்
வால் நுனியில்
சோகத்தைச் சுமந்தபடி
காற்றாடியாய் நிற்கின்றது.

நீ, ராட்சசன்.
நீ, துரோகி
ஒளிரும் என் ஓவியங்களைக் —
காவுகொண்டு
என் தலைமீது விதியெழுத முயல்வது
எப்படித் தகும்?
சொல்!

*28.08.2002*

## அறுந்துபோன தொலைபேசி உரையாடல்

நீ இன்னும்,
பிழை பிழையாய்ப் பதிவு செய்கிறாய்.
கால் உடைந்த முடப்பொட்டுப் பூச்சிகளின்
வலைப்பின்னல் ஒட்டறைகளை
ஏன் இன்னும் உருவாக்குகிறாய்?

உனை எப்படி நினைத்திருந்தேன் தெரியுமா?
இன்று பத்துச் சதக் காசுக்கும் லாயக்கில்லாமல்
ஒரு மூலைக்குள் தூக்கியெறிப்பட்டுக் கிடக்கிறாய்.

ஆனால் நீ,
ஒளிவட்டங்களை உருவாக்கி
கொம்புகளை வளர்த்தெடுத்து
கால்கள் தெரியாமல்
தலைநகரில் வலம் வருகிறாய்
எத்தனை நாளைக்கு?

உன்சுயம்
யாருக்கும் தெரியாது.
அப்படி நீ,

வாலையும் தலையையும் —
காட்டுவதில் தீரன்.
பின்திரையில் தாளம்போடுவதில்
உனை மிஞ்ச யாரிருக்கிறா?

இன்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.
கிணுகிணுத்து ஒலிக்கும்போதே
அதைத் தூக்கியெறிந்திருக்க வேண்டும்
யாருக்குத் தெரியும் நீதான் என்று.

*30.06.2001*

**ஒன்று அல்லது இரண்டு;**
**சாப்பாட்டுக்குமுன் அல்லது**
**சாப்பாட்டுக்குப்பின்**

*கருணை வடிவான மாந்தர்கள்*
*வேண்டுதலை ஓங்காரமிட்டு*
*இழந்துபோன நாள்களின்*
*நினைவுகளோடு . . .*

*தனித்தவெளி,*

*அசைவின்றி நடக்க*
*இசை பீறிட்டு எழுகின்றது.*
*பாடலின் காலடிகள்*
*காலத்தின் குரலாய் ஒலிக்கின்றது.*

*நான் மட்டும்*
*கணத்திலும் கடவுளை நினையாது*
*புறந்தள்ளி நிற்கின்றேன்.*
*என் நினைவுகளில் புதைந்தபடி*

*கிழக்கின் பக்கம்*
*மலருகின்ற புன்னகை*
*வெள்ளாடையாய்ப் பூக்கின்றது.*

*நம்பிக்கையின் தேற்றல்*
*இடியோசையாய் எழ,*
*நான் நகைக்கின்றேன்.*

ஏன் என்று புரியவில்லை?
அவர்கள் அப்படித்தான் பாடினார்கள்.
எல்லோரும் உத்தமர்களாக
இசை பீறிட்டெழ
வான மண்டலத்தைத் தகர்க்கும்
பேரோசையாய் கிளர்ந்தெழுந்தது பாடல்.

நான் மட்டும்
எந்த ஒரு அருகதையற்றவனாய்
கடவுளை ஒரு சொட்டும்
நினைத்துப் பாராது
புறந்தள்ளி நின்றேன்.
காலம் நடக்கிறது...

*30.12.2000*

## மொத்திய இரவு

நடுச்சாமம்
நித்திரை அரண்டது.

பிசுபிசுத்தது சாரண்.
கைவைக்கும் இடமெல்லாம்
சுக்கிலத் திரவம்.

வியர்வைத் துளிகள்
தோல் பட்டையால் வழிந்து
தாகமெடுத்தது.

இன்னும் ஈட்டியாத் திமிர்கிறது
விறைப்புச் சற்றும் தளராது
ஏக்கம் கொள்கிறது ஆணுடம்பு

மெல்ல நகர்ந்து
சவம்போல் கிடக்கும் அவளைச்
சூடேற்றி.
தழுவ . . .
சவுத்துப்போனது குறி.

சீ . . . என்னது?
என்னை மெல்லத் தள்ளிச் சரித்து
மென்பெருவிரலால் நீவி
விறைப்பேற்ற —
ஆத்திரம்கொண்டு
அதிர்ந்தது நிலம்
முலைகள் விம்மியெழ

மேல்பல் கிறுகளுக்கிடையில்
முன்முலை நசுபட
'அம்மா' என முனகியவள்.
போதும்.
எனைத் தழுவி
இருகன்னம் முழுதும் மொத்தி

"மறக்க முடியாது உனை" என்றாள்

இன்னம் விறைப்புத் தளரவில்லை.
சீறி அவளை நோக்கியெழ
போதும் இன்று
நகர்ந்தாள்.

இப்படித்தான் நகர்கிறது நாழிகை.
(எதற்கும் உபயோகமற்று)
கண்ணை விழித்தேன்
சாமம் ஒன்று

*30.06.2002*

## வாழ்வெழுதிய ஓவியம்

மனம் நிம்மதியாயிருந்தது.
காற்றடித்தோய்ந்த வெளியாய்

சிகப்பு
கறுப்பு
பச்சை

நீலக்கோடுகளைப் பார்த்து
உள்ளிறங்கியது ஓவியம்.

*07.07.2002*

## ❑ பல்லிடுக்கில் தொங்குகின்ற, இப்படியான நாட்டில் ஒரு ராணியின் புலம்பல்

*ராணியின் திடீர் அறிவிப்பை*
*யாரும் எதிர்பார்க்கவில்லை.*
*தேசம்கூட ஒருதரம் ஆடிப் —*
*பேயறைந்துபோய் நின்றது.*

*மாளிகையின் வாசல்*
*இழுத்து மூடப்பட்டது.*
*ஒரு குருவிகூட நுழைய முடியாதபடி*
*வீரர்கள் காவல் காத்தார்கள்.*

*புதிதாய்ப்போன தம்பிகள்*
*தலையில் அடித்து ஓலமிட்டார்கள்.*
*பல லட்சம் செலவையெண்ணி*
*இரவு முழுவதும் கண்ணீர் வடித்தார்கள்.*
*ஏங்கினார்கள்.*
*ஆயிரம் ஆசைகள் அழிந்துபோயின.*

*—2—*

*குரங்குகள் அங்குமிங்கும் தாவின.*
*மரங்கள் யானையிலும்*
*இருக்கைகள் தும்பியிலும்*
*தும்பிகள் இருக்கையிலும் சாய்ந்தன.*

*அவள் எதற்கும் அஞ்சவில்லை.*
*சிறு புன்னகை பூத்தாள்.*
*“நேற்றுப் பெய்த மழைக்கு முளைத்த*
*தகரப்பத்தைகள்” என*
*எக்காளமிட்டாள்.*

ஒரு துளிகூடக் கலங்கவில்லை அவள்.
சோமபானத்தை உடைத்துப் பருகினாள்.
அவளுக்கு ஆணைப் பெண்ணாக்கும்
பெண்ணை ஆணாக்கும்
மந்திரம் மாத்திரம் தெரியாது.
மற்றவை அவளுக்கு அத்துப்படி.

தேசம் அவளின் சுண்டுவிரலின்கீழ் நின்றது.
நேற்றுக்கூட அவள்
பெரும் உலகத்தைப் படைக்கப்
போவதாக அறைகூவல் இட்டாள்.

யாரும் அவளின் பேச்சைக்
காதில் போட்டுக்கொள்ளவில்லை.
ஆத்திரம் கொண்டாள்.
புறாக்கள் பறந்தன.
கூரிய ஆயுதங்கள் முளைத்தன.
எல்லோரும் பயந்து நடுங்கினார்கள்.
"எங்களைக் காப்பாத்து தாயென"
சரண் அடைந்தார்கள்.

ராணி சிரித்தாள்.
"என்னைப் பகைத்து யாரும் வாழ முடியாது"
"சிவப்புத் தம்பிகள்"கூட —
என்னோடு இப்போ
முழக்கமிட்டாள்.

"யாரும் எனை அசைக்க முடியாது.
நான்தான் யுகப் பிரமம்!"
அவள் தெளிவாகக் கூறினாள்.

எல்லோரும் தலையாட்டினார்கள்.
"அம்மா தாயே!
நீங்கள்தான் எம் மகாராணி."

தலையாட்டினார்கள்.
மந்தைக் கூட்டங்கள்

"முடிசூட்டும்" விழா நெருங்கியது.
நரிகளின் ஊளை
தெருத்தெருவாய் ஒலித்தன.
வர்ணங்கள் றோட்டை அலங்கரித்தன.
புதுப்புது மனிதர்கள்
ஊருக்குள் தோன்றினார்கள்
பிச்சைப் பாத்திரம் ஏந்தினார்கள்.
"அம்மா தாயே" பிச்சை போடுங்களென
இரந்தார்கள்.

யாரும் அசையவில்லை.
மொக்கனாக வாழ்ந்த காலத்தை
ஊர் மக்கள் எண்ணிப் பார்த்தார்கள்.
ஏமாந்து ஏமாந்து
பரம ஏழையாய்ப் போனதை நினைத்தார்கள்.
ஒன்றுபடுங்கள்
இல்லையேல் ஒரு புள்ளடிகூட —
ஒருவருக்கும் இல்லை.

திடீரென்று ஒற்றுமையொலித்தது
நகரங்கள் தகதகவெனக் காட்சியளித்தன.
"அப்புக்காத்து" நரிகள்,
ஆளையால் கட்டிப்பிடித்துக் கூத்தாடின.
"பழசை" மறந்து
"தாடிகளுடன்" அன்பைப் பகிர்ந்தன.

யாரும் எம் நாட்டுக்கு ராஜாக்களல்ல
"அவர்கள்தான் ராஜாக்கள்".
பல்லில் பொய்யையொட்டி
பட்டோலை ஒலித்தது.

தீம்தாம்... தீம்தாம்...
திமிதித்தாம்.... திமிதித்தாம்.
ராணி மூக்குக்கு முன்
கோபத்தை நகர்த்தினாள்.
கிழக்கின் சிங்கம் சாய்ந்தபின்
அவளின் காய் நகர்த்தல்
அசுரத்தனமாகயிருந்தது.

காலை வாரிவிட்டதாகவும்
துரோகமிழைத்துவிட்டதாகவும்
கோஷமிட்டாள்.
"எப்படியும் வெல்வோம்.
வீணை எங்கள் கையில்"

வெள்ளத்தம்பியை அழைத்தாள்.
"இனி, நீதான் கிழக்கின் சிங்கம்" என்றாள்.
"சகலதையும் கவனி"
நரிகளை வாங்குவதற்கு
"கோடிகளை" இறைத்தாள்.

ராணியின் முகம்
ரெண்டு நாளாய்க் கெட்டுவிட்டது.
ஒரு துளிச் சிரிப்புக்கூட —
அவளின் முகத்திலில்லை.
யாருக்குத் தெரியும்.
என்ன மர்மமோ?

அவள் இனி என் —
கனவிலும் வராள்.

*01.11.2001*

## அமுது கடைகின்ற பாற்கடல்

அமுது கடைகின்ற
எமது பாற்கடலில்
அலைகள் ஓய்ந்து
பேரோசையெதுவும் எழாது
அமைதி காக்கிறது கடல்.

இருபத்தைந்து வருடப் பணி

யாருக்கும் புரியாது
அசுரர்களின் அக்கிரமத்திலிருந்து
தேவாமிருதம் பருக;
இரத்தத்தையும் சதையையும்
கயிறாக்கி
வேதனையையும் கொடுமையையும் மத்தாக்க

சிறு பொட்டளவு
கிளம்பியிருக்கிற அமுதம்;
கடலின் மேற்பரப்பில்
"அத்தலைகிறது",
இரவு நேரப் படகின் ஒளியாய்.

*02.01.2003*

## பொலித்தீன் பிசாசை விரட்டு

பொலித்தின்நெடி
உலகம் பூரா ஆரூடம் கூறிற்று.

வானம் இடிந்து
வயல் முழுதும் நச்சு பொதிந்து
காற்றுக்கூடக் கடன் வாங்கும்
காலம் வரும்.

நீர்வற்றி
தாகமெடுத்து
கடவாயால் எச்சில் வழிந்து
விசர்நாயாய் மாந்தரெல்லாம்
மாண்டு போவார்.

பெரும் தீயெழும்
நிலம் பிளந்து
பூமியையே விழுங்கிவிடும்.

— 2 —

காலம் வரும்.
நாம் கண்திறவாமல்
'சொப்பின்' பேய்க்குள்ளும்
'பொலித்தீன்' அரக்கனுக்குள்ளும்
'பிளாஸ்ரிக்' மாயைக்குள்ளும்
காலமொட்டினால்
கருஞ்சுழி எழும்
ஆறும் கடலும் ஒன்றாய்ப் போகும்.

— *3* —

*நம் மண்ணைக் காத்திட வேண்டும்.*
*நல்ல காற்றைச் சுவாசிக்க,*
*நல்ல தண்ணீரைப் பருகிட*
*நஞ்சில்லாச் சோற்றைத் தின்ன*
*நம் சந்ததி இம்மண்ணிலே வேரூன்றி வாழ*
*நம் மண்ணைக் காத்திட வேண்டும்.*

— *4* —

*இது உயிரினப் பூமி.*
*ஏர் பாய்ந்து*
*வீர்கொண்டெழும் பூமி.*

*இது உயிரினப் பூமி.*
*தந்தானா தானனா தானா*
*தானன்ன தானன்ன தானா.*

*26.04.2003*

## ❑ வெறிபிடித்தலைகின்ற ஊத்த குடியன்

அவன் திடீரென
வேட்டையாடுவதற்குத் தயாராகிவிட்டான்.
மாமிசம் தின்று, ஒரு வருஷம் கழிந்த துக்கத்தில்
"புணம்" தேடிப் பதறின —
இரு Hero Honda

சற்றுப் பின் சோர்ந்து போய்
சண்டை தொடங்கவில்லையெனத்
தலையிலடித்தான்.

கனவுபோல இருக்கிறது அவன் நினைவு.
கிலிகொள்ளும் அந்த நாள்கள்
இன்றும் குலைநடுங்குகிறது.
ரத்தப்பொலியெடுக்கும்
காடேறியாய்
உலாவிய காலம்
உயிரைக் கையில் பிடித்து
ஓட்டிய காலம்
மெல்லத் துளிர்க்கிறது.

அவன்தான் ராஜா!
எந்த விசாரணையும் அவனுக்கில்லை.
தெருநாயைச் சுடுவதாய்ச் சுடுவான்.
நீதிமன்றில்,
எந்தக் கேள்வியும் அவனுக்கில்லை.
Mis fire என்று
நீதிக்கு முன்னே 'பிஸ்டலை' நீட்டுவான்.
யாரும் "ஒண்டும்" கேளார்.

மீண்டும் காக்கா, குருவிகள் சுடுவதாய்ச்
சுடுவான்.

... ... ...

நீதிவான் "ஓம்" எனத் தலையாட்டுவார்.

இருட்டுப்பட்ட நேரத்தில்
பிஸ்டலைக் கையிலெடுத்து
ரெத்தம் குடிப்பதற்கலைவான்.
தாகம் தீர்ந்தபின்
தலையைத் திருகி
நாற்சந்தியில் வீசுவான்.

சூப்பு வைத்துக் குடித்த —
காலையும் கையையும்
நடுரோட்டில் எறிவான்.
நீதிவான் சொல்வார்
அவன் நிரபராதியென்று.

இன்று ஒன்றுமில்லை.
புறாவின் வருகையின்பின்
சிங்கத்தின் காலைப் பிடித்துக் —
காலம் ஓட்டுகிறான்.

நேற்றுத் திடீரென
நெடுந்தீவில் முழங்கியபோது
குழம்பிவிட்டதாக...
மூலையில் கிடந்த குடையைக் கையிலெடுத்தான்.
பாவம் அவன்.

*10.02.2003*

## பயம் கொல்லுகின்ற புதியவிரவு

இப்படித்தான் நாய்கள் முன்னமும் குரைத்தன.
திகீரென்று நெஞ்சு குளிர்ந்தது.
கால்கள் விறைக்க
படபடப்பு எங்கும் பரவும்.
இன்று மதியச் செய்தி கேட்டபின்
இரவு நீண்டநேரம்
முற்றத்திலிருந்து
முற்றுப் பெறாத கவிதையைத்
திருத்த முயல்கிற ஒவ்வொரு கணமும்
நாய்கள் குரைத்து
என் தைரியத்தைக் குலைத்தன.
ஏனோ தெரியல்ல?
எனக்குப் பயமாயிருக்கு.

எனக்கெதிரே
எந்த அழுக்குக் கரத்தின் பிஸ்டல்
நீட்டப்படப் போகிறதோ?

மிகப் பயமாயிருக்கு
இந்தவிரவு.

*22.04.2003*

## ... தீரா, மயக்கண்டை

முந்தநாளாய்,
அரிப்புத் தீரவில்லை.

அந்த வேள்வித் தீ
இன்று உருவானதல்ல

எப்போதோ ஒருநாள்
அவன்தான் என்னில்
பத்தவைத்தான்.

என்னுள் ஒழிந்து கிடந்த
முறுக்கைத் தட்டிவிட்டு
உடலெங்கும் கிளறியெறிந்து

... ... ...

பின்னாளில் அமாவாசையாய்ப்
போனான்.
நேற்று,
பொழுதுசாய்ந்த மயக்கண்டை நேரத்தில்
மீண்டும் அவன் என்னில் எழுந்தான்
முறுக்கேறி
திமிரேறிற்று நரம்பு.

அவன் சொன்னதை
நான் தட்டியதில்லை
மெல்லப் பொத்திவிட்டேன்.
மனசு சரியில்லை
காற்றைக் கிழித்துப்போகும்
"கலிவரின்" பின்
ஏதுமற்றவனாய்ப் போகிறேன்.

மீண்டும் ஒரு
பொழுது எழுவான்
அது கடைசிப் பொழுதாய்.

*11.09.2003*

## புதிய சாத்தானின் எழுகை

அருவருப்பாய்க் கழிகிறது
இன்றைய பொழுது.

வெட்கம்
சாபங்களினால் ஜெபிக்கப்பட்ட ஒருத்தன்
பிசாசுகளின் வலைக்குள் வீழ்ந்து
வார்த்தைகளை அறுத்துக்கொண்டு
ஓங்காரமிடுகிறான்.

சாத்தானின்
நீள் கொடிய காலம்
என்னைக் குலைநடுங்கவைக்கும்
தூங்கும் என் மனசு
பதறியடித்துத் துயர்கொள்ளும்.

என் மக்களே!
நீங்கள் பாவிகள்.
சாத்தானின் வலைமுடிப்புகள்
உங்களை மூடுமுன்
நுரை கக்கும் கடலில் பாய்ந்து —
மாய்ந்துவிடுங்கள்.

பிறிதொரு நாள்
நான் காப்பேன்.
சாதியற்ற
பிரதேசமற்ற
வர்க்கமற்ற
காலத்தில்.

*04.04.2004*

## வெறிநாய்களின் காலம்

கடித்துக் குதறித் தின்ன
அலைகின்ற வெறி நாய்களாய்,
எனக்குத் தெரியாத முகங்கள்.
பின்னும் முன்னும்
சைக்கிளைத் துரத்துகின்றன.
என்னைக் கண்டு —
பிரிந்து போகின்றன.
வேறொரு நாளில்

*02.04.2004*

## மனவெளியில் ஒரு கப்பல்

மீட்க முடியாத அடித்தளத்தில்
அசைகிறது எனது கப்பல்
அலைகள் எகிறி
ஆட்டம் காட்டி
தோற்றுப்போய் மறைகிறது.

"எப்படியும் மீட்பேன்"
ஓர் இராட்சத அலையொன்று
புரண்டு மேலெழுகிறது.
பின் தோற்றுப்போகிறது.

இப்போதென் மனவெளியில்
அசைகின்ற கப்பல்
மேலெழுந்து
துயர்படராத
வெண்மணல் தரையில்
உறவிழந்து
தன்னந்தனியாய்
குப்பறக் கிடக்கிறது.

*02.04.2004*

## இழந்துபோன கனவுகள்

இங்கேதான்
உயிர்மூச்செறிந்ததொரு காலம்.
அச்சம் அப்பி
நாகூட எழ முடியாது
இன்றும் கலந்துள்ளது.

என்னுடன் இருந்த
முகங்களை நினைத்துப் பார்க்கின்றேன்.
கன்னம் வீங்கி
ரத்தம் ஒழுகும் —
முகங்கள் எனக்குள் பிடிபடாது
கைநழுவிப்போகிறது.

நிதானித்தும்
இருபத்தி மூன்று முகங்களும்
அசைவொன்றைக் காட்டி
மயிர்கூச்சலெறிந்து
மறைந்திற்று.

என்மகனே!
அப்பாவின்
துயர்படிந்த —
ரத்தக் கறைகளைப் பார்!

இது உன் பொக்கிஷம்
அன்னியனின் ஈனக்கரங்களினால்
உன்தேச விடுதலைக்குச் சிந்திய
விலையற்ற பொக்கிஷம்.

இது சிறிதொரு பயணமல்ல
வேள்வித் தீயை ஏந்திக்கொண்டு
காடையும் கரம்பையும்
ஆற்றையும் கடலையும்
கடந்துவந்த — பெரும்பயணம்.

நீ பெரியவனாகிவிட்டாய்.
இழந்துபோன கனவுகளை மீட்டெடுக்க
தயாராகியிரு.

*01.04.2004*

## மீள்கிறகாலம்

விலையற்ற படகொன்று
பெரும் பள்ளத்திற்குள்
மறைந்துபோனது நேற்று.

மீட்புக்காய் ஏங்கி
துருப்பிடித்த காலம்
சபித்துப்போனது.

கெஞ்சல்
போர் முரசாய் அதிர
சுழன்ற காலம்
மீட்புக் கரங்களை நீட்டி
தப்பிச்சென்ற துஷ்டர்களை
இழுத்துக்கொண்டு
மீள்கிறது இன்று

*26.04.2004*

## வாழ்வை எழுதுகிறது மரணம்

சோகம் அப்பி அலைகின்ற
தெருக்களில்
உன் நினைவுகள் விரிகின்றன.

கனத்துத் துடிக்கின்ற —
மனசு
அமைதி கொள்ளாது
அறுபட்ட கோழியாய்த் துடிக்கின்றது.

தோழா!
நீ, ஓராயிரம் சேதியாய் —
ஒவ்வொரு பொழுதும் ஜனனிப்பாய்.

எப்படி உனை மறக்க முடியும்?

காற்றில் பறந்துவரும்
உன் சேதிகேட்டு
"சமாதி" யடிகூட
உன் புகழைப் பாடும்.

நாமும் உனை நினைத்துப்
பெருமை கொள்வோம்.
எமது சிகரத்தில் நீ பெரும் இமயம்
யார் அதை உடைத்தது?

எங்கிருந்து அந்த நஞ்சு வந்தது?
சாத்தானின் அழுக்குக் கரம்
உனைச் சுட்டு வீழ்த்தியபோது

நாம் கதறியழுதோம்.
"அச்செய்தி உண்மையா"?
என, ஏங்கித் தவியாத்தவித்தோம்.

காலம் இப்படி
முற்றுப்புள்ளி வைக்குமென
ஒருகணமும் —
நாம் நினைத்துப் பார்த்ததில்லை.

உன் வீரதீரச் செயல்
ஒருகணப் பொழுதில்
கசக்கப்பட்டதை நினைக்கும்போது
எம்நெஞ்சு வெடிக்கிறது நண்பா.

யார் எதிரி?
யார் துரோகி?
யார் நண்பன்?
எமக்குப் புரியவில்லை.
சிங்களத்தேசத்தின்
சேனைகள் உனை —
பழிதீர்த்திருந்தால்
ஒரு கணம் மனம் ஆறியிருப்போம்.

ஆனால், இன்று ...

ரணப்பட்ட ஒவ்வோர்
ஆத்மாவும்
கதறுகிறது.
"நாம் ஏன் ..."?
"நமக்கேன் இந்த விதி"?

*10.05.2004*

## மாடிழுத்த மனவெளியாய்க் காலம்

*பறிக்கப்பட்ட வாழ்வை*
*மீட்டெடுக்கிறது காலம்.*

*ஓரவஞ்சகம்*
*கூரிய நகக்கீறலிலிருந்து*
*தப்பித்து — பின்*
*செத்துப்போன பிறிதொருநாளில்*
*மீண்டும் புன்னகைத்த காலம்,*
*நட்சத்திரங்களாய் மினுங்க*
*மீண்டது.*

*எனினும்*
*இனிவரும் காலம்*
*பேரோசையை வீசலாம்.*

*மாடிழுத்துப்போன*
*மனவெளியாய்*
*வாடிநிற்கும் நம்பிக்கை*
*உதிருகின்ற நட்சத்திரங்களை*
*ஒட்டிக்கொண்டு*
*காலம் மீளும்.*

*09.06.2004*

## முளைக்கின்ற கை

இப்போதுதான் —
தனிமைப்படுத்தப் பட்டிருக்கிறேன்.

குரலெடுத்து எழுகின்ற எனது சுதந்திரம்
தெருப்பாடகன் ஒருவனால்
எரிக்கப்படுகிறது.

நிலாப் பழுத்து வெடித்து
கொட்டித் தீர்க்கிறது வெறுப்பை.

எனக்குக்,
கைகள் முளைக்கின்றன.

*25.06.2004*

## ❑ செட்டை முளைத்த கவிஞன்

செட்டை முளைத்த
பெரும் கவிஞன்
எழுகிறான்.

கண் விடுக்காத பூனைக்குட்டியாய்
என் கவிதை உயிர்க்கிறது.
நாளை நான்
பிணமாக எரிப்பேன்.

*30.06.2004*

## ❏ பேயாய் அலைகிற மரணம்

மரணம்
மரணம்
தெருமுழுதும் அலைகிறது.
அச்சத்தால்
இருள்படிந்த ராத்திரியில்
அறுந்து தொங்குகின்ற,
இதயத்தைத் தூக்கிக்கொண்டு
கழிகிறது.

II

யாராய் —
அந்த நஞ்சுவூறுமெனத் தெரியாது.
எப்படியும், ஏதும் செய்யலாம்...
பிணத்திற்கு
காரணம் வைக்கலாம்.
நீதியின் சாட்சிகளாய்
அடித்துக் கூறி...
ஊர் முழுதும் தீயாய்ப் பரவலாம்.

III

எப்படியும்
காலம் —
மீட்க முடியாது
மரணத்தை எழுதிவிட்டு
பேயாய் அலைகிறது
இன்று.

*01.05.2004*

## ஊர்ந்து வருகின்ற வெள்ளைக்கால்

தூரக் கடல் இரைகின்ற
என் ஊர் எல்லையில்
புதுக்கால் முளைத்திருக்கின்றது.

ஊர்ந்து வருகின்றது வெள்ளைக்கால்
சட்டென்று
எல்லையிட்டுத் தூணாய் நிற்கின்றது.

அடித்தொண்டையில் கத்தி
குரலொன்று எழுகிறது.
யாருக்கும் மயிர் நெட்டவில்லை.

தூண்கள் கனத்து
கம்பிகள் நீண்டன.
. . . . . . . . .

என் உயிரில்
பெற்றோல் எரிகிறது.
"எழுங்கடா சோம்பேறிகளே"!

தூரக் கடல் இரைகிறது.
கடலைப் பார்த்துக் கணகாலம்
நீலம் நிறமிழந்து —
வானத்திலில்லை.

*01.07.2004*

## ❑ மெல்லிய வலியாய் எழுகிற மரணம்

மரணம்
இடது நெஞ்சை அழுத்துகிறது.

புறம்தள்ளி
ஒளிரும் ராஜ்சியத்தில்
நான் நிலைக்க முயல்கின்றேன்.

முடியாது
மெல்லிய வலியாய்
எழுகிறது.
“பிறப்பின் மகத்துவம்
பொட்டெனப் போயிடுமோ?

இல்லை

“இதுவொன்றுமில்லை”
... ... ...
... ... ...

*23.07.2004*

## ஜூலை - 5

எனது அறை முழுதும்,
இருநாள்களாகக் கவிகிறது.
அவன் பேச்சு.

முடியல்ல . . .
விடாமல் பெய்யும்
பேய்மழையில்
பூட்டிய ஜன்னலைத் திறந்துவிட்டு
வெளியேறுகிறேன்.

மழை எனை நனைத்துக் கரைக்கிறது.
அவன் நினைவுகள்
ஒரு துளிகூட இறக்கவில்லை.

பக்கத்தில் தவளைகள் இரைகின்றன.
ஆடுகள் ஒதுக்கத்தில் அலறுகின்றன.

கனலாய் நின்று
திரும்புகிறேன்.
அறை முழுதும்
கற்பூரமாய் அவன் வாசம்.

*06.07.2004*

## ❑ கயிறு நீள்கிற இரவு

கயிறு நீள்கிற இரவில்
செத்த பாம்பாய்ப் படுக்கிறது வீரம்.

நாங்கள் நடக்கின்றோம்
துயர் அள்ளிக்கொட்டும்
இலுப்பைப் புல்லைத் தாண்டி ...
. . . . . . . . .

நடக்கின்றோம்.
ஏழுகடல் தாண்டி ...

*25.06.2004*

சரிநிகர்

மூன்றாவது மனிதன்

கறுப்பு

வெளிச்சம்

தேனகம்

தினக்கதிர்

தினக்குரல்

செ. யோகராசா, ஆத்மா

நவம் மாஸ்டர் அவர்கட்கும்

நினைவில் வராததற்கும்

நன்றி.



நான் போகிறேன்
யாரும் தேட வேண்டாம்
மஞ்சநதொடுவாய் 'சேக் போயின்றில்'
நேற்றுச் செத்துப்போன நண்பனாய்
நானும் மாள விரும்பவில்லை...

வெளியீடு

விலை
இலங்கை: ரூ.150
இந்தியா: ரூ. 40